செ.வெ.எண். 16/மார்ச் தேதி : 08.03.2017

## பத்திரிக்கை செய்தி

# தருமபுரி மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு 2017 -18ம் ஆண்டு அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 10-ம் வகுப்பு மாணவ, மாணவியர்கள் மற்றும் தனித்தேர்வர்கள் உட்பட 24473 பேர் தேர்வு எழுதினார்கள் -மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!





தருமபுரி மாவட்டத்தில் 74 தேர்வு மையம் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 12437 மாணவர்கள், 11379 மாணவிகள் என மொத்தம் 23816 பேர் மற்றும் தனித் தேர்வர்கள் 657 பேர் ஆக மொத்தம் 24473 பேர் 304 மையங்களில் இத்தேர்வினை எழுதுகிறார்கள். இத்தேர்விற்காக 10 வினாத்தாள் கட்டு காப்பு மையங்களில் இருந்து போலீஸ் பாதுகாப்புடன் வழித்தட அலுவலர்கள் மூலம் வினாத்தாள் கட்டுகள் அனைத்து தேர்வு மையங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டன. அனைத்து தேர்வு மையங்களிலும் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அவசர தேவைக்கு மருத்துவ குழுக்கள் தயார் நிலையில் உள்ளன. தேர்வு மையங்களுக்கு எளிதில் வந்து செல்லும் வகையில் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. இடைநிலை தேர்வில் எவ்வித முறைகேடும் இல்லாமல் நடைபெற 201 ஆசிரியர்கள் அடங்கிய பறக்கும் படை அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர மாவட்ட அலுவலர்கள் தலைமையில் 6 பறக்கும் படை கண்காணிப்பு பணியில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்காக 33 பேர் சொல்வதை எழுதுபவர்களாக (Scribes) நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் கண் பார்வையற்றோர், காது கேளாதோர் மற்றும் வாய் பேச இயலாதவர்கள் என மாற்றுத்திறனாளிகள் 63 பேர் தேர்வு எழுதுகின்றனர். நம் மாவட்டத்தில் நடைபெறும் தேர்வினை கண்காணிக்க தொடக்கக்

கல்வி இணை இயக்குநர் (நிர்வாகம்) திருமதி. சசிகலா அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வின் போது முதன்மை கண்காணிப்பாளர்கள் திரு. பச்சியப்பன், திருமதி. பிரேமா, தலைமையாசிரியர் திரு. பொன்முடி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.